ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2183/20 - 2020 ජූලි මස 06 වැනි සඳුදා - 2020.07.06
*2183/20 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 06 ஆந் திகதி திங்கட்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் பிரமாணக் குறிப்பு**

இலங்கைச் சனநாயக சோசலிக் குடியரசின் இல. 415 மற்றும் 1986.08.05 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் பிரமாணக் குறிப்பு மற்றும் அதற்கு அவ்வப்போது செய்யப்பட்ட திருத்தங்களுக்கு அமைய எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்பட்டதாக கருதப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு பாதிப்பற்ற வகையில் கீழே குறிப்பிடப்படும் இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் பிரமாணக் குறிப்பு பதிலீடு செய்யப்படுகின்றது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

**எம். ஏ. பீ. தயா சென்ரத்,**
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

2020, யூலை 02.

***01. செயல்வலுப்பெறும் திகதி.***- இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு 2020.07.06 ஆந் தினத்திலிருந்து செயல்வலுப்பெறல் வேண்டும்.

***02. நியமிப்புச் செய்யும் அதிகாரி*** : அரசாங்க சேவை ஆணைக்குழு

*03*. சேவை வகுதி / சேவை வகுதிகள் :

*3.1* சேவை வகுதி : நிறைவேற்றுநர்
: சிரேஷ்ட நிறைவேற்றுநர்

*3.2* தரங்கள் : நிறைவேற்றுநர் : தரம் III, II மற்றும் I
: சிரேஷ்ட நிறைவேற்றுநர் : விசேட தரம்

1A - G 32452 — 37 (2020/07)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

***3.3 பணிகளை கையளித்தல் :*** தரங்கள் அடிப்படையில் பணிகள் கையளிக்கப்படுவதில்லை. இந்த சேவை வகுதிக்கு எந்தவொரு பணியும் சேவை அவசியத்தின் பேரில் சேவைமூப்பு மற்றும் திறமை அடிப்படையில் எந்தவொரு தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தருக்கும் திணைக்களத் தலைவரினால் கையளிக்கப்படலாம். .

***04. பணிக் கடமைகள் :*** நிறுவனத் தலைவருக்கு கையளிக்கப்படும் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சியளிப்பு விடயப் பரப்புக்குள் வரக்கூடிய தேசிய மற்றும் சர்வதேச தொழிற் சந்தைக்கு தேவையான அறிவு, சிந்தனை மற்றும் திறமைகளைக் கொண்ட கைவினைஞர்களை உருவாக்குவதற்கு நிறுவனத் தலைவர்களினால் அந்தந்தப் பதவிகளுக்கு குறித்துரைத்து கையளிக்கப்படும் பணிகள் இந்தச் சேவையின் பதவிகளை வகிப்பவர்களினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும். அதன் கீழ் மாணவர்களின் அறிவு, சிந்தனை மற்றும் திறமைகளை விருத்தி செய்தல், பயிற்சியளிப்பதற்கான விரிவுரைகளை நடாத்துதல், செயல்முறை செயற்பாடுகள் மூலம் பயிற்சி வழங்குதல், மாணவர் வழிகாட்டல் மற்றும் உளவளத்துணை, மாணவர்களுக்கான பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகள், தொழில்நுட்பக் கல்வி தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், கல்விக் கணக்காய்வுகளை மேற்கொள்ளல், நிறுவன நிர்வாக விடயங்களை மேற்கொள்ளல், பாடநெறிகளை அடையாளம் காணல் மற்றும் பணிகளுடன் தொடர்புடைய விடயங்களை திட்டமிடுதல், நடைமுறைப்படுத்தல், வழிநடாத்துதல் மற்றும் மதிப்பீடு, கட்டுப்பாட்டு விதிகளை செயற்படுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய செயற்பாடுகள் இந்த சேவைக்கு உரியதாகும்.

***05. சம்பளம் :***

***5.1 சம்பளக் குறியீட்டு இலக்கம் :*** நிறைவேற்றுநர் - SL – 1 – 2016
: சிரேஷ்ட நிறைவேற்றுநர் - SL – 3 – 2016

***5.2 சம்பள அளவுத்திட்டம் :***

: நிறைவேற்றுநர் - ரூ. 47,615/-10x1335-8x1630-17x2170-110,895/-
: சிரேஷ்ட நிறைவேற்றுநர் - ரூ. 88,000/-12 x 2700-120,400/-

***5.3 தர முறைக்குரிய ஆரம்ப சம்பளப் படிமுறை :***

| *தரம்* | *ஆரம்ப சம்பளப் படிமுறை* | *ஆரம்ப சம்பளப் படிநிலை (ரூ)* |
|---|---|---|
| தரம் III | படிமுறை 1 (SL-1-2016) | ரூ. 47,615/- |
| தரம் II | படிமுறை 12 (SL-1-2016) | ரூ. 62,595/- |
| தரம் I | படிமுறை 20 (SL-1-2016) | ரூ. 76,175/- |
| விசேட தரம் | படிமுறை 1 (SL-3-2016) | ரூ. 88,000/- |

***06. சேவைக்குரிய பதவிகள் :***

***6.1 அனுமதிக்கப்பட்ட பதவிப் பெயர்கள், அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை மற்றும் தரங்கள் :***

| *அனுமதிக்கப்பட்ட பதவிப் பெயர்கள்* | *பதவி அனுமதிக்கப் பட்ட தரம்* | *அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை* | *பணிகள்* |
|---|---|---|---|
| விரிவுரையாளர்<br>ஆலோசகர் | III, II<br>III, II | 274<br>897 | 1. ஏற்புடைய பாடநெறிகளின் விரிவுரைகள் மற்றும் பயிற்சியளிப்பு நடவடிக்கைகளை உரிய காலத்திற்குள் உரிய தரத்தில் நடாத்திச் செல்லல் மற்றும் தேவையான விடயங்களை திட்டமிடுதல், நடைமுறைப்படுத்தல்.<br>2. உள்ளக பரீட்சைகளின் மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் வழிநடாத்தல்.<br>3. மாணவர் கருத்திட்ட அறிக்கைகளுக்கு அறிவுரை வழங்குதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.<br>4. பாடநெறிகளுடன் தொடர்புடைய களச் சுற்றுலாக்கள், கல்விச் சுற்றுலாக்கள் மற்றும் மாணவர்களின் வெளி தொழிற்சாலைக் கல்வி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல். |

| அனுமதிக்கப்பட்ட பதவிப் பெயர்கள் | பதவி அனுமதிக்கப் பட்ட தரம் | அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | பணிகள் |
|---|---|---|---|
| | | | 5. மாணவர் வழிகாட்டல் நடவடிக்கைகளுக்கு தேவையான அறிவுரைகளை வழங்குதல்.<br>6. வெளி அரசாங்க நிறுவனங்களுக்கு தேவையான தொழில்நுட்ப அறிவுரைகளை வழங்குதல்.<br>7. ஏற்புடைய துறையில் தொழிற்சாலை முகாமைத் துவம், பொருட்பதிவேட்டுப் புத்தகங்களைப் பராமரித்தல் மற்றும் பொருள் சுற்றாய்வை மேற்பார்வை செய்தல்.<br>8. வெளி நிறுவனங்களுடன் அறிவு மற்றும் தொழில் நுட்பத்தை பரிமாற்றிக் கொள்ளல்.<br>9. நிறுவனத் தலைவரினால் பதவிக்கு ஏற்புடையதாக கையளிக்கப்படும் ஏனைய கடமைகளை நிறை வேற்றுதல். |
| பிரதிப் பணிப்பாளர் (மனிதவள அபிவிருத்தி )/ (கல்வி- கமத்தொழில்) /(கல்வி - வர்த்தகம் மற்றும் மொழி)/(கல்வி - விஞ்ஞானம்/கணிதம்)/ (கல்வி - இயந்திரவியல்) / (கல்வி - சிவில்)/(கல்வி - தகவல் தொழில்நுட்பம்)/ (பரீட்சை - ஆங்கிலம்/ (பரீட்சை - வர்த்தகம்) / (மதிப்பீடு NVQ 5-6) / (மதிப்பீடு -NVQ 3-4)/ (தொழில் வழிகாட்டல் மற்றும் உளவளத்துணை) /(கைத்தொழில் ஒருங்கிணைப்பு மற்றும் சந்தைப்படுத்தல்)/ (விசேட கருத்திட்டங்கள்)/ (தர முகாமைத்துவம்) / (ஆராய்ச்சி ) | II | 16 | 1. கல்வி நடவடிக்கைகள், பரீட்சைகள் மற்றும் மதிப்பீடு, வியாபார அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி, தொழில் வழிகாட்டல், தொழில்நுட்ப உதவிச் சேவைகள் மற்றும் நிர்வாகம் ஆகிய பிரிவுகளுக்கு பொறுப்பளிக்கப்படும் அந்தந்தப் பிரிவுகளுக்குரிய பணிகளை செயற்படுத்தல், வழிநடாத்தல் மற்றும் மதிப்பிடல்.<br>2. கல்வி கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு உதவுதல்.<br>3. நிறுவனத் தலைவரினால் பதவிக்கு ஏற்புடையதாக கையளிக்கப்படும் ஏனைய கடமைகளை நிறை வேற்றல். |
| உப அதிபர் | II | 30 | 1. தொழில்நுட்பக் கல்லூரிகளின் கல்வி, பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டுச் செயன்முறையை முறையாகப் பேணிவருதல்.<br>2. வருடாந்தக் கற்கை நேர அட்டவணைகளைத் தயாரித்தல், மாணவர் ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல், உள்ளக மற்றும் வெளிவாரி ஆலோசகர்களின் நடவடிக்கைகள் மற்றும் பிரிவுத் தலைவர்களின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்.<br>3. நிறுவனத் தலைவரினால் பதவிக்கு ஏற்புடையதாக கையளிக்கப்படும் ஏனைய கடமைகளை நிறை வேற்றல். |

| அனுமதிக்கப்பட்ட பதவிப் பெயர்கள் | பதவி அனுமதிக்கப் பட்ட தரம் | அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | பணிகள் |
|---|---|---|---|
| மேலதிகப் பணிப்பாளர் (தொழில்நுட்பவியல் கல்லூரி) | I | 09 | 1. தொழில்நுட்பவியல் கல்லூரிகளின் கல்வி, பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டுச் செயன்முறையை முறையாகப் பேணிவருதல்.<br>2. வருடாந்தக் கற்கை நேர அட்டவணைகளைத் தயாரித்தல், மாணவர் ஒழுக்காற்று நடவடிக்கை களை மேற்பார்வை செய்தல், உள்ளக மற்றும் வெளிவாரி ஆலோசகர்களின் நடவடிக்கைகள் மற்றும் பிரிவுத் தலைவர்களின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்.<br>3. தொழில்நுட்பவியல் கல்லூரிகளின் கீழ் காணப்படும் தொழில்நுட்பக் கல்லூரிகளின் உள்ளக மற்றும் பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் பின்னூட்டல் செய்தல்.<br>4. நிறுவனத் தலைவரினால் பதவிக்கு ஏற்புடையதாக கையளிக்கப்படும் ஏனைய கடமைகளை நிறை வேற்றல். |
| அதிபர் | I | 30 | 1. தொழில்நுட்பக் கல்லூரிகளின் நிர்வாக நடவடிக் கைகள் மற்றும் கையளிக்கப்பட்டுள்ள நிதி அதிகாரங்களை நடைமுறைப்படுத்தல்.<br>2. தொழில்நுட்பக் கல்லூரிகளின் கல்வி மற்றும் மதிப்பீட்டுச் செயன்முறையை திட்டமிடல், வழி நடாத்தல், நிர்வகித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.<br>3. ஏற்புடைய வெளி நிறுவனங்களுடன் தேவையான தொடர்புகளைப் பேணிவரல் மற்றும் ஏற்புடைய ஆலோசனைக் குழுக்களின் தலைவராக செயற்படல்.<br>4. அமைச்சின் கீழுள்ள நிறுவன ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவராக செயற்படல்.<br>5. நிறுவனத் தலைவரினால் பதவிக்கு ஏற்புடையதாக பொறுப்பளிக்கப்படும் ஏனைய கடமைகளை நிறைவேற்றல். |
| பணிப்பாளர் (தொழில்நுட்பவியல் கல்லூரி) | I | 09 | 1. தொழில்நுட்பவியல் கல்லூரிகளின் நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் கையளிக்கப்பட்டுள்ள நிதி அதிகாரங்களை நடைமுறைப்படுத்தல்.<br>2. தொழில்நுட்பவியல் கல்லூரிகளின் கல்வி மற்றும் மதிப்பீட்டுச் செயன்முறையை திட்டமிடல், வழி நடாத்தல், நிர்வகித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.<br>3. ஏற்புடைய வெளி நிறுவனங்களுடன் தேவையான தொடர்புகளைப் பேணிவரல் மற்றும் ஏற்புடைய ஆலோசனைக் குழுக்களின் தலைவராக செயற் படல்.<br>4. அமைச்சின் கீழுள்ள நிறுவன ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவராக செயற்படல். |

| அனுமதிக்கப்பட்ட பதவிப் பெயர்கள் | பதவி அனுமதிக்கப் பட்ட தரம் | அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | பணிகள் |
|---|---|---|---|
| | | | 5. தொழில்நுட்பவியல் கல்லூரிகளின் கீழ் காணப்படும் தொழில்நுட்பக் கல்லூரிகளின் நிர்வாக மற்றும் கல்வி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் பின்னூட்டல் செய்தல்.<br>6. நிறுவனத் தலைவரினால் பதவிக்கு ஏற்புடையதாக கையளிக்கப்படும் ஏனைய கடமைகளை நிறைவேற்றல். |
| பணிப்பாளர் (கல்வி நடவடிக்கைகள்/ பரீட்சைகள் மற்றும் மதிப்பீடு/தொழில் வழிகாட்டல் மற்றும் சந்தைப்படுத்தல் /வியாபார அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி/தொழில்நுட்ப உதவிச் சேவைகள்) | I | 05 | 1. கல்வி நடவடிக்கைகள், பரீட்சைகள் மற்றும் மதிப்பீடு, வியாபார அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி, வியாபார அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி, தொழில்நுட்ப உதவிச் சேவைகள் மற்றும் தொழில் வழிகாட்டல் ஆகிய துறைகளுக்கு பொறுப்பளிக்கப்படும் அந்தந்தப் பிரிவுகளுக்கு ஏற்புடைய பணிகளை திட்டமிடுதல், வழிநடாத்தல், மதிப்பிடுதல், மேற்பார்வை மற்றும் அனைத்து பொறுப்புக்களையும் வகித்தல்.<br>2. கல்வி கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு உதவுதல்.<br>3. நிறுவனத் தலைவரினால் பதவிக்கு ஏற்புடையதாக பொறுப்பளிக்கப்படும் ஏனைய கடமைகளை நிறைவேற்றல். |
| மேலதிக பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்பக் கல்வி) | விஷேட | 01 | 1. தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சியளிப்பு செயன்முறையின் கொள்கைகள் /மூலோபாயங்கள்/ திட்டங்கள் /தயாரித்தல் மற்றும் அதற்கு ஏற்புடைய அனைத்து பொறுப்புக்களையும் வகித்தல்.<br>2. நிறுவனத் தலைவரினால் பதவிக்கு ஏற்புடையதாக கையளிக்கப்படும் ஏனைய கடமைகளை நிறை வேற்றல். |

**குறிப்பு** :- விரிவுரையாளர் மற்றும் ஆலோசகர் பதவிகளுக்கான ஏற்புடைய விடயத் துறைகளும் விரிவுரையாளர், ஆலோசகர் பதவிகளுக்காக ஊடக மொழிக்கு அமைய பதவிகளின் எண்ணிக்கையும் “அ” பின்னிணைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**6.2 தரங்களுக்கு அமைய அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை**

| தரம் | எண்ணிக்கை |
|---|---|
| விஷேட தரம் | 01 |
| முதலாம் (I) தரம் | 53 |
| இரண்டாம் (II) தரம் | 46 |
| இரண்டாம் (II) தரத்தின் மற்றும் மூன்றாம் (III) தரத்தின் ஒன்றிணைந்த பதவிகளின் எண்ணிக்கை | 1171 |

**ஒன்றிணைந்த உத்தியோகத்தர் எண்ணிக்கை :**

முதலாம் (I) தரம் : 53
இரண்டாம் (II) தரம் : 46
இரண்டாம் (II) தரம் மற்றும் மூன்றாம் (III) தரம் : 1171

ஒரு தரத்திலிருந்து இன்னுமொரு தரத்திற்கு பதவி உயர்த்தும் நோக்கத்திற்காக தரம் III, II மற்றும் I ஆகிய தரங்கள் ஒன்றிணைந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கைக்கு உரியதாக கருதப்படும்.

6.3 பதவியின் / பதவிகளின் தன்மை : நிரந்தமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.
(ஓய்வூதிய முறை தொடர்பில் அரசாங்கத்தினால் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.)

**07. ஆட்சேர்ப்பு முறை :**

**7.1 ஆட்சேர்க்கப்படும் சதவீதம் :**

7.1.1 விரிவுரையாளர் மற்றும் ஆலோசகர் பதவிகளுக்கு

| **பிரிவு** | **சதவீதம்** |
|---|---|
| திறந்த | 60% |
| மட்டுப்படுத்தப்பட்ட | 40% |
| திறமை | ஏற்புடையதன்று |

**குறிப்பு** :- ஆலோசகர் மற்றும் விரிவுரையாளர் பதவிகளுக்கு ஆட்சேர்க்கும் போது ஒரு பிரிவின் கீழ் ஒதுக்கப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அந்தப் பிரிவின் கீழ் தகைமைகளைப் பூர்த்தி செய்த போதியளவு எண்ணிக்கையிலான விண்ணப்பதாரிகள் இல்லாமலிருக்குமிடத்து அந்தப் பிரிவின் கீழ் எஞ்சும் வெற்றிடங்கள் மற்றைய பிரிவின் கீழ் தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகளைக் கொண்டு நிரப்பப்படும்.

**7.2 திறந்த ஆட்சேர்ப்பு :**

7.2.1 ஆட்சேர்க்கப்படும் தரம் : தரம் III

7.2.2 தகைமைகள் :

7.2.2.1 கல்வித் தகைமைகள் :
7.2.2.2 தொழிற் தகைமைகள் :
} "ஆ" பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகைமைகளைப் பெற்றிருத்தல்.

7.2.2.3 அனுபவம் :
மேற்படி தகைமைகளைப் பெற்றுக்கொண்ட பின்னர் "ஆ" பின்னிணைப்பில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

7.2.2.4 உடற் தகைமைகள் :
அனைத்து அபேட்சகர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவு உடல் மற்றும் உள ரீதியான தகைமையுள்ளவராக இருத்தல் வேண்டும்.

7.2.2.5 வேறு :

I. இலங்கைப் பிரசையாக இருத்தல்.
II. நல்லொழுக்கம் உள்ளவராக இருத்தல்.
III. விண்ணப்பதாரி ஏற்புடைய அனைத்து தகைமைகள் மற்றும் உரிய வயதெல்லை என்பவற்றை விண்ணபங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு எல்லா விதத்திலும் பூரணப்படுத்தி இருந்தால் மாத்திரமே விண்ணப்பதாரி சேவைக்கு ஆட்சேர்க்கப்படும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் எனக் கருதப்படும்.

**7.2.3 வயது :**

7.2.3.1 ஆகக் குறைந்த வயதெல்லை : 21 வயது

7.2.3.2 உச்ச வயதெல்லை : 40 வயது

**7.2.4 ஆட்சேர்ப்பு முறை :**

I. மின்னியல், உலோக வேலை, மர வேலை, கட்டிடம், தொழில்நுட்ப சித்திரம், மோட்டார் இயந்திரவியல், தங்கஆபரணம், குளிரேற்றல் மற்றும் குளிரூட்டி, இலத்திரனியல், சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து ஆகிய தொழிற்துறைகளுக்கான ஆலோசகர் பதவிகளுக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் எழுத்துமூலப் பரீட்சை மற்றும் தொழிற் தேர்வின் மூலம் ஆட்சேர்க்கப்படுவர்.

II. அதற்கான எழுத்துமூலப் பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினாலும் தொழிற் தேர்வு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் தொழிற் தேர்வுச் சபையினாலும் நடாத்தப்படும். தொழிற் தேர்வின் பெறுபேறுகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால்

பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் உளச்சார்பு, பொது அறிவு மற்றும் தொழிற் தேர்வின் புள்ளிகளுக்கு முறையே 1:1:3 விகிதத்திற்கு நிறைவைத்து எழுத்துமூலப் பரீட்சைக்கு மற்றும் செயல்முறைப் பரீட்சைக்குத் தனித்தனியாக 40% புள்ளிகள் அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் திறமை தொடர் ஒழுங்கு முறைக்கு அமைய பட்டியலிடப்பட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்படும்.

III. அதன் பின்னர் விண்ணப்பதாரிகளது தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு விடுக்கப்படும். எழுத்துமூலப் பரீட்சையின் மற்றும் தொழிற் தேர்வின் புள்ளிகளின் கூட்டுத்தொகைக்கு அமைய திறமை தொடர் ஒழுங்கில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் எண்ணிக்கையைக் கொண்ட விண்ணப்பதாரிகள் இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

IV. மேற்படி இல. I இல் குறிப்பிடப்பட்டுள்ள துறைகளைச் சாராத துறைகளின் விரிவுரையாளர் பதவிக்காக மற்றும் ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் எழுத்துமூலப் பரீட்சையொன்றின் மூலம் மாத்திரம் ஆட்சேர்க்கப்படுவர். எழுத்துமூலப் பரீட்சையின் புள்ளிகளின் கூட்டுத்தொகைக்கு அமைய 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் திறமை தொடர் ஒழுங்கு முறைக்கு அமைய பட்டியலிடப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்த பின்னர் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் எண்ணிக்கையைக் கொண்ட விண்ணப்பதாரிகள் தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

V. விண்ணப்பதாரிகளின் தகைமைகளை உறுதிப்படுத்திய பின்னர் நிலவும் வெற்றிடங்களுக்கு ஏற்ப அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் எண்ணிக்கையினர் ஏற்புடைய பதவியில் தரம் III க்கு ஆட்சேர்க்கப்படுவர்.

7.2.4.1 எழுத்துமூலப் பரீட்சை :

| பாடங்கள் | உச்சப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|
| உளச்சார்பு | 100 | 40% |
| பொது அறிவு | 100 | 40% |

(எழுத்துமூலப் பரீட்சைப் பற்றிய விபரங்கள் "ஈ" பின்னிணைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது)

7.2.4.1.1 நடாத்தும் அதிகாரி : பரீட்சை ஆணையாளர் நாயகம்

7.2.4.2 தொழிற் தேர்வு :

| பாடங்கள் | உச்சப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் | அபேட்சகர் பெற்றுக்கொண்டுள்ள புள்ளிகளுக்கு நிறைவைக்கும் பெறுமானம் |
|---|---|---|---|
| தொழிற் தேர்வு | 100 | 40 | 3 |

(தொழிற் தேர்வு பற்றிய விபரங்கள் "உ" பின்னிணைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது)

7.2.4.2.1 நடாத்தும் அதிகாரி : அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் பரீட்சை சபையொன்று

7.2.4.3 பொதுவான நேர்முகப் பரீட்சை :

**நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் :**

இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதற்கு அமைவாக வெளியிடப்படும் ஆட்சேர்ப்பு வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உள்ளனவா என்பதை பரீட்சித்தல் மற்றும் உடற் தகைமைகளைப் பரீட்சித்தல்.

7.2.4.3.1 பொதுவான நேர்முகப் பரீட்சை சபையை நியமிக்கும் அதிகாரி: அரசாங்க சேவை ஆணைக்குழு

7.2.4.4 தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை : ஏற்புடையதன்று

7.2.5 விண்ணப்பங்கள் கோரப்படும் முறை : அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதன் மூலம் மற்றும் இணையத்தளத்தில் பிரசுரிப்பதன் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படும்.

**7.3 மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு :**

7.3.1 ஆட்சேர்க்கப்படும் தரம் : தரம் III

7.3.2 தகைமைகள் :

7.3.2.1 கல்வித் தகைமைகள் :
7.3.2.2 தொழிற் தேர்வுகள் :
} "இ" பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கு தகைமைகளைப் பெற்றிருத்தல்.

7.3.2.3 அனுபவம் :
மேற்படி தகைமைகளைப் பெற்றுக்கொண்ட பின்னர் "இ" பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கு அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

7.3.2.4 உடற் தகைமைகள் :
அனைத்து அபேட்சகர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவு உடல் மற்றும் உள ரீதியான தகைமையுள்ளவராக இருத்தல் வேண்டும்.

7.3.2.5 வேறு :

I. சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தராக இருத்தல்.

II. நல்லொழுக்கம் உடையவராக இருத்தல்.

III. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய ஒழுக்காற்றுத் தண்டனையொன்றுக்கு உட்படாத ஒருவராக இருத்தல்.

IV. விண்ணப்பதாரி ஏற்புடைய அனைத்து தகைமைகளையும் விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு எல்லா விதத்திலும் பூரணப்படுத்தி இருந்தால் மாத்திரமே விண்ணப்பதாரி சேவைக்கு ஆட்சேர்க்கப்படும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் எனக் கருதப்படும்.

7.3.3 **வயது** : ஏற்புடையதன்று.

7.3.4 **ஆட்சேர்ப்பு முறை** :

I. மின்னியல், உலோக வேலை, மர வேலை, கட்டிடம், தொழில்நுட்ப சித்திரம், மோட்டார் இயந்திரவியல், தங்கஆபரணம், குளிரேற்றல் மற்றும் குளிரூட்டி, இலத்திரனியல், சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து ஆகிய தொழிற்துறைகளுக்கான ஆலோசகர் பதவிகளுக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் எழுத்துமூலப் பரீட்சை மற்றும் தொழிற் தேர்வின் மூலம் ஆட்சேர்க்கப்படுவர்.

II. அதற்கான எழுத்துமூலப் பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினாலும் தொழிற் தேர்வு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் தொழிற் தேர்வுக் குழுவினாலும் நடாத்தப்படும். தொழிற் தேர்வின் பெறுபேறுகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் உளச்சார்பு, பொது அறிவு மற்றும் தொழிற் தேர்வின் புள்ளிகளுக்கு முறையே 1:1:3 விகிதத்திற்கு நிறைவைத்து எழுத்துமூலப் பரீட்சைக்கு மற்றும் செயல்முறைப் பரீட்சைக்குத் தனித்தனியாக 40% புள்ளிகள் அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் திறமை தொடர் ஒழுங்கு முறைக்கு அமைய பட்டியலிடப்பட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்படும்.

III. அதன் பின்னர் விண்ணப்பதாரிகளது தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு விடுக்கப்படுவர். எழுத்துமூலப் பரீட்சையின் மற்றும் தொழிற் தேர்வின் புள்ளிகளின் கூட்டுத்தொகைக்கு அமைய திறமை தொடர் ஒழுங்கில் நிலவும் வெற்றிடங்களின்

எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் எண்ணிக்கையைக் கொண்ட விண்ணப்பதாரிகள் இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

IV. மேற்படி இல. I இல் குறிப்பிடப்பட்டுள்ள துறைகளைச் சாராத துறைகளின் விரிவுரையாளர் பதவிக்காக மற்றும் ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் எழுத்துமூலப் பரீட்சையொன்றின் மூலம் மாத்திரம் ஆட்சேர்க்கப்படுவர். எழுத்துமூலப் பரீட்சையின் புள்ளிகளின் கூட்டுத்தொகைக்கு அமைய 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் திறமை தொடர் ஒழுங்கு முறைக்கு அமைய பட்டியலிடப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் எண்ணிக்கையைக் கொண்ட விண்ணப்பதாரிகள் தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

V. விண்ணப்பதாரிகளின் தகைமைகளை உறுதிப்படுத்திய பின்னர் நிலவும் வெற்றிடங்களுக்கு அமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் எண்ணிக்கையினர் ஏற்புடைய பதவியில் தரம் III இற்கு ஆட்சேர்க்கப்படுவர்.

7.3.4.1 **எழுத்துமூலப் பரீட்சை :**

| பாடங்கள் | உச்சப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|
| உளச்சார்பு | 100 | 40% |
| பொது அறிவு | 100 | 40% |

(எழுத்துமூலப் பரீட்சைப் பற்றிய விபரங்கள் "ஈ" பின்னிணைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது)

7.3.4.1 நடாத்தும் அதிகாரி : பரீட்சை ஆணையாளர் நாயகம்

7.3.4.2 தொழிற் தேர்வு :

| பாடங்கள் | உச்சப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் | அபேட்சகர் பெற்றுக் கொண்டுள்ள புள்ளிகளுக்கு நிறைவைக்கப்படும் பெறுமானம் |
|---|---|---|---|
| தொழிற் தேர்வு | 100 | 40 | 3 |

(தொழிற் தேர்வு பற்றிய விபரங்கள் "உ" பின்னிணைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது)

7.3.4.2.1 நடாத்தும் அதிகாரி : அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் பரீட்சை சபையொன்று.

7.3.4.3 பொதுவான நேர்முகப் பரீட்சை :
**நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் :**
இலங்கை தொழில்நுட்ப கல்விச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதற்கு அமைவாக வெளியிடப்படும் ஆட்சேர்ப்பு வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உள்ளனவா என்பதை பரீட்சித்தல் மற்றும் உடற் தகைமைகளைப் பரீட்சித்தல்.

7.3.4.3.1 பொதுவான நேர்முகப் பரீட்சை சபையை நியமிக்கும் அதிகாரி : அரசாங்க சேவை ஆணைக்குழு

7.3.4.4 தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை : ஏற்புடையதன்று

7.3.5 விண்ணப்பங்கள் கோரப்படும் முறை : அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதன் மூலம் மற்றும் இணையத்தளத்தில் பிரசுரிப்பதன் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படும்.

7.4 திறமை அடிப்படையிலான ஆட்சேர்ப்பு : ஏற்புடையதன்று.

*08.* **வினைத்திறன்காண் தடைதாண்டல் :**

***8.1***

| ***எந்த வினைத்திறன்காண் தடைதாண்டல் என்பது பற்றி*** | ***எத்தனை வருடங்களுக்கு முன்னர் வினைத்திறன்காண் தடைதாண்டலில் சித்தியடைய வேண்டும் என்பது பற்றி*** | ***வினைத்திறன்காண் தடைதாண்டலின் தன்மை எழுத்துமூலப் பரீட்சை/தொழிற் தேர்வு /சான்றிதழ் பாடநெறி/வேறு*** |
|---|---|---|
| 1 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் | தரம் III இற்கு ஆட்சேர்க்கப்பட்டு 03 வருடங்கள் கழிவதற்கு முன்னர் | எழுத்துமூலப் பரீட்சை (“ஊ” பின்னிணைப்பு) |
| 2 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் | தரம் II இற்கு பதவி உயர்த்தப்பட்டு 03 வருடங்கள் கழிவதற்கு முன்னர் | எழுத்துமூலப் பரீட்சை (“எ” பின்னிணைப்பு) |
| 3 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் | தரம் I இற்கு பதவி உயர்த்தப்பட்டு 05 வருடங்கள் கழிவதற்கு முன்னர் | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவகத்தினால் நடாத்தப்படும் சான்றிதழ் பாடநெறியொன்று |

*8.2* வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை எவ்வளவு காலத்திற்கு ஒருமுறை நடாத்தப்படும் : ஒரு வருடத்திற்கு இரண்டு தடவைகள்

*8.3* வினைத்திறன்காண் தடைதாண்டல்களுக்குரிய பரீட்சைகளை நடாத்தும் அதிகாரிகள் யாவர்?

1 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் : பரீட்சை ஆணையாளர் நாயகம் அல்லது அமைச்சின் செயலாளரினால் அனுமதிக்கப்படும் நிறுவனமொன்றின் மூலம்.

2 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் : பரீட்சை ஆணையாளர் நாயகம் அல்லது அமைச்சின் செயலாளரினால் அனுமதிக்கப்படும் நிறுவனமொன்றின் மூலம்.

ஏற்புடைய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை மற்றும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டிய முறை தொடர்பில் எதிர்காலத்தில் சுற்றறிக்கையொன்று வெளியிடப்படும்.

*9.* **மொழித் தேர்ச்சி :**

***9.1***

| ***மொழி*** | ***பெற்றுக்கொள்ள வேண்டிய தேர்ச்சி*** |
|---|---|
| 1. அரசகரும மொழி | அரசகரும மொழியல்லாத ஊடக மொழியொன்றினால் சேவைக்கு இணைந்த உத்தியோகத்தர்கள் உரிய மொழித் தேர்சியை தகுதிகூர்நிலைக் காலப்பகுதிக்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| 2. மற்றைய அரசகரும மொழி | அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 01/2014 மற்றும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளின் பிரகாரம் ஏற்புடைய மட்டத்தில் மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

*10.* **தரங்களுக்கான பதவி உயர்வுகள்**

***10.1* தரம் III இலிருந்து தரம் II இற்கு பதவி உயர்வு.**

*10.1.1* **பொதுவான செயலாற்றுகைக்கு அமைய,**

*10.1.1.1* பூரணப்படுத்த வேண்டிய தகைமைகள் :

I. நியமனம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

II. சேவை வகுதி தரம் III இல் ஆகக் குறைந்தது பத்து (10) வருட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தியிருத்தல் மற்றும் சம்பள ஏற்றங்கள் பத்தை (10) உழைத்திருத்தல்.

III. அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுத் திட்டத்திற்கு அமைய பதவி உயர்வுத் தினத்திற்கு உடன் முன்னரான பத்து (10) வருட காலத்தில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்கு மேலான செயலாற்றுகையை காண்பித்திருத்தல்.

IV. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய ஒழுக்காற்றுத் தண்டனையொன்றுக்கு உட்படாத ஒருவராக இருத்தல்

V. ஏற்புடைய மட்டத்தில் மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியை உரிய காலத்தில் பெற்றிருத்தல்.

VI. ஏற்புடைய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினத்திற்கு சித்தியடைந்திருத்தல்.

10.1.1.2 பதவி உயர்வு வழங்கும் முறை : தகைமைகளைப் பூர்த்திசெய்யும் உத்தியோகத்தர்களினால் உரிய மாதிரிப்படிவத்திற்கு அமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு வேண்டுகோள் விடுக்கும் போது தகைமைகளைப் பரீட்சித்த பின்னர் தகைமைப் பெறும் தினத்திலிருந்து செயற்படும் வண்ணம் தரம் II இற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பதவி உயர்த்தப்படுவர்.

**10.2 தரம் II இலிருந்து தரம் I இற்கு பதவி உயர்வு.**

10.2.1 **பொதுவான செயலாற்றுகைக்கு அமைய,**

10.2.1.1 பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் :

I. ஏற்புடைய துறையில் பட்டப்பின் படிப்பு பட்டம் பெற்றிருத்தல் ("ஏ"பின்னிணைப்பின் படி)

II. சேவை வகுதி தரம் II இல் ஆகக் குறைந்தது ஏழு (07) வருட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தியிருத்தல் மற்றும் சம்பள ஏற்றங்கள் ஏழு (07) உழைத்திருத்தல்.

III. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய ஒழுக்காற்றுத் தண்டனையொன்றுக்கு உட்படாத ஒருவராக இருத்தல்.

IV. அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுத் திட்டத்திற்கு அமைய பதவி உயர்வுத் தினத்திற்கு உடன் முன்னரான ஏழு (07) வருட காலத்தில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்கு மேலான செயலாற்றுகையை காண்பித்திருத்தல்.

V. ஏற்புடைய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினத்திற்கு சித்தியடைந்திருத்தல்.

VI. இந்த சேவைப் பிரமாணக் குறிப்பின் 12.2 இன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

10.2.1.2 பதவி உயர்வு வழங்கும் முறை : தகைமைகளைப் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்களினால் உரிய மாதரிப் படிவத்திற்கு அமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு வேண்டுகோள் விடுக்கும் போது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தகைமைகள் பரீட்சிக்கப்பட்ட பின்னர் தகைமைப் பெறும் தினத்திலிருந்து செயற்படும் வண்ணம் தரம் I இற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பதவி உயர்த்தப்படுவர்.

**குறிப்பு** : பொதுவான மட்டத்திலான செயலாற்றுகைக்கு அமைய பதவி உயர்வு வழங்கும் போது உரிய தினத்தில் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய தவறும் உத்தியோகத்தர்களின் பதவி உயர்வுத் திகதி வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைவதற்கு தாமதமாகிய காலத்திற்கு சமமான காலத்தினால் தாமதிக்கப்படல் வேண்டும்.

**10.3 தரம் I இலிருந்து விஷேட தரத்திற்கு பதவி உயர்வு**

10.3.1 பூரணப்படுத்த வேண்டிய தகைமைகள் :

I. ஏற்புடைய துறையில் பட்டப்பின் படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

II. பதவி உயர்வுக்காக தகைமைப் பெறும் திகதிக்கு நிறைவேற்று உத்தியோகத்தர் வகுதியில் முதலாவது தரத்தில் ஐந்து (05) வருட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தியிருத்தல் மற்றும் முதலாம் தரத்திற்கு பதவி உயர்வு பெற்ற பின்னர் சம்பள ஏற்றங்கள் ஐந்தை (05) உழைத்திருத்தல்.

III. பதவி உயர்வுக்கு தகைமைப் பெறும் திகதிக்கு தகைமைப் பெறும் சேவை வகுதியில்/ பதவிகளுக்குரிய நிறைவேற்றுத் தரத்தில் 18 வருடத்திற்கு குறையாத செயலூக்கமுள்ள சேவைக் காலத்தை பூரணப்படுத்தியிருத்தல்.

IV. பதவி உயர்வுக்கு தகைமைப் பெறும் திகதிக்கு உடன் முன்னரான ஐந்து (05) வருட காலப்பகுதியில் வருடாந்த செயலாற்றுகை திருப்திகரமான அல்லது அதற்கு மேலான மட்டத்தில் காணப்படல்.

V. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய ஒழுக்காற்றுத் தண்டனையொன்றுக்கு உட்படாத ஒருவராக இருத்தல்.

10.3.2 பதவி உயர்வு வழங்கும் முறை :

I. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பின்வரும் மாதிரிப்படிவத்திற்கு அமைய அனுமதிக்கப்படும் புள்ளித்திட்டத்திற்கு அமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்பட்டு அதன் பெறுபேறுகளுக்கு அமைய வெற்றிடங்களின் எண்ணிக்கை மீது விஷேட தரத்திற்கு பதவி உயர்வு வழங்கப்படும்.

II. தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் போது சேவை அனுபவம் மற்றும் திறமை கருத்திற் கொள்ளப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகள் | உச்சப் புள்ளிகள் |
|---|---|
| சேவை அனுபவம் | 80 |
| திறமை | 20 |
| மொத்தப் புள்ளிகள் | 100 |

**11. பதவிகளுக்கு நியமித்தல் :**

**11.1 தகைமைகள்**

| பதவி | தகைமைகள் |
|---|---|
| பிரதிப் பணிப்பாளர் /உப அதிபர் | இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் தரம் II உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் புள்ளித் திட்டமொன்றுக்கு அமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் தகைமை மதிப்பீட்டுப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு வழங்கப்படும் புள்ளிகளின் திறமை தொடர் ஒழுங்கு முறைக்கு அமைய நிலவும் வெற்றிடங்களுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஏற்புடைய பிரதிப் பணிப்பாளர்/ உப அதிபர் பதவிகளுக்கு நியமிக்கப்படுவர். |

| பதவி | தகைமைகள் |
|---|---|
| அதிபர் /மேலதிக பணிப்பாளர் (தொழில்நுட்பவியல் கல்லூரி) | இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் தரம் I உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் புள்ளித்திட்டமொன்றுக்கு அமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் தகைமை மதிப்பீட்டுப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு வழங்கப்படும் புள்ளிகளின் திறமை தொடர் ஒழுங்கு முறைக்கு அமைய நிலவும் வெற்றிடங்களுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிபர் /மேலதிகப் பணிப்பாளர் (தொழில்நுட்பவியல் கல்லூரி) பதவிகளுக்கு நியமிக்கப்படுவர். |
| பணிப்பாளர் (திணைக்கள / தொழில்நுட்பவியல் கல்லூரி) | இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் தரம் I உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் புள்ளித் திட்டமொன்றுக்கு அமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் தகைமை மதிப்பீட்டுப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு வழங்கப்படும் புள்ளிகளின் திறமை தொடர் ஒழுங்கு முறைக்கு அமைய நிலவும் வெற்றிடங்களுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஏற்புடைய பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்படுவர். |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்பக் கல்வி) | இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்பக் கல்வி) பதவிக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுவார். |

12. **அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளில் காணப்படும் பொது நிபந்தனைகளுக்குப் புறம்பான நிபந்தனைகள் :**

12.1 **நிரந்தரமாக்குவதற்கான நிபந்தனைகள் :**
சேவையின் தரம் III க்கு ஆட்சேர்க்கப்படும் அனைத்து உத்தியோகத்தர்களும் தொழிற்துறை தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது திணைக்களத்தினால் நடாத்தப்படும் கற்பித்தல் / பயிற்றுவித்தல் முறைமைகள் பற்றிய 300 மணித்தியால பயிற்சி பாடநெறி ஒன்றுக்கு பங்குபற்றுதல் வேண்டுமென்பதோடு, பதவியில் நிரந்தரமாக்குவதற்கு இந்தப் பயிற்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும். சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்டு மூன்று (03) வருடங்களுக்குள் இந்தப் பயிற்சிப் பாடநெறியை நடாத்துவதற்கான ஒழுங்குகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

12.2 **பயிற்சி மற்றும் அபிவிருத்தி :**
சேவையின் தரம் II ஐச் சேர்ந்த அனைத்து உத்தியோகத்தர்களும் திணைக்களத்தினால் நடாத்தப்படும் நிறுவன ஒழுங்குவிதிகள், நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற் சந்தைப் பற்றிய 100 மணித்தியால பயிற்சி பாடநெறியொன்றை பூரணப்படுத்தல் வேண்டும். தரம் I க்கு பதவி உயர்வு பெறுவதற்கு இந்தப் பயிற்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

13. **அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கோடல்களுக்குப் புறம்பான பொருள்கோடல்கள் :**

I. "வர்த்தமானிப் பத்திரிகை" என்பது, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகை எனப் பொருள்படும்.

II. "சேவைப் பிரமாணக் குறிப்பு" என்பது, இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு எனப் பொருள்படும்.

III. "அரசாங்க சேவை ஆணைக்குழு" என்பது, இலங்கை சனநாயக ரோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 54 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நியமிக்கப்படும் அரசாங்க சேவை ஆணைக்குழு எனப் பொருள்படும்.

IV. "சேவை" என்பது, இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவை எனப் பொருள்படும்.

V. "அமுலாகும் திகதி" என்பதுடு, இந்த பிரமாணக் குறிப்பு செயற்பட ஆரம்பிக்கும் திகதி எனப் பொருள்படும்.

VI. "செயலாளர்" என்பது, தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் உள்ளடங்கும் நிரல் அமைச்சின் செயலாளர் எனப் பொருள்படும்.

VII. "திணைக்களம்" என்பது, தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் எனப் பொருள்படும்.

VIII. "தொழில்நுட்பக் கல்லூரி" என்பது, தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்லூரி எனப் பொருள்படும்.

IX. "தொழில்நுட்பவியல் கல்லூரி" என்பது, தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் கீழுள்ள தொழில்நுட்பவியல் கல்லூரிகள் எனப் பொருள்படும்.

X. "செயலூக்கமுள்ள சேவைக்காலம்" என்பது, சம்பளமற்ற லீவுக் காலப்பகுதிகள் உள்ளடக்கப்படாத ஆயினும் அமைச்சரவையினால் கொள்கை ரீதியில் செயலூக்கமுள்ள சேவைக் காலமாக கருதப்பட வேண்டுமென விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள சம்பளமற்ற லீவுக் காலங்களும் உள்ளடங்கிய உத்தியோகத்தர் தனது பதவிக்குரிய சம்பளத்தைப் பெற்றுவந்த சேவைக் காலம் எனப் பொருள்படும்.

*14.* **உள்ளீர்ப்பு ஏற்பாடுகள்**

I. இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதிக்கு இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையிலுள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் தாபன விதிக்கோவையின் VII அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு உட்பட்ட வகையில் பின்வருமாறு உள்ளீர்ப்புச் செய்யப்படுவர்.

II. அந்தந்தப் பதவிகளுக்கு நியமிக்கப்படும் திகதியை அடிப்படையாகக் கொண்டு சேவைக் காலம் கணக்கிடப்படும். எவ்வாறெனினும், உள்ளீர்ப்பு காரணமாக ஏற்புடைய உத்தியோகத்தரின் சம்பள ஏற்றத் திகதியில் மாற்றம் நிகழாது என்பதோடு, அந்தத் திகதி உள்ளீர்ப்புக்கு முன்னரான சம்பள ஏற்றத் திகதியாக மாற்றமின்றி தொடர்ந்து செயற்படல் வேண்டும். அவ்வாறே சம்பள மாற்றத்தின் போது ஏற்புடைய ஆள் இறுதியாக பெற்றுவந்த சம்பளப் படிநிலை புதிய சம்பளப் படிநிலைக்கு நேரொத்ததாக இருப்பதன் மீது தாபன விதிக்கோவையின் VII அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவுக்கு அமைய அடுத்துவரும் மேலுள்ள சம்பளப் படிநிலையில் அமர்த்தலும் ஆகாது.

*14.1.1* **சேவையின் தரம் III க்கு உள்ளீர்ப்புச் செய்தல்.**- இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதிக்கு இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் வகுப்பு III இல் உள்ள உத்தியோகத்தர்கள்

*14.1.2* **சேவையின் தரம் II க்கு உள்ளீர்ப்புச் செய்தல்.**- இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதிக்கு இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் வகுப்பு II இல் உள்ள உத்தியோகத்தர்கள்

*14.1.3* **சேவையின் தரம் I க்கு உள்ளீர்ப்புச் செய்தல்.**- இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதிக்கு இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் வகுப்பு I இல் உள்ள உத்தியோகத்தர்கள்

*15.* **ஓய்வுபெறுவதற்கான மாற்றுவழி.**-

இந்த வேைப் பிரமாணக் குறிப்பு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதிக்கு சேவையிலுள்ள சுயவிருப்ப ஓய்வூதிய வயதை அடையாத உத்தியோகத்தரொருவருக்கு ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 7 ஆம் பிரிவின் கீழ் ஓய்வுபெறுவதற்கான விருப்பத்தை தெரிவிக்கும் வரப்பிரசாதத்தை வழங்க வேண்டுமென்ற அளவுக்கு இந்த சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளினால் தீங்கான தாக்கம் நிகழ்ந்துள்ளதாக அரசாங்க சேவை ஆணைக்குழு திருப்தியடையுமிடத்து இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து ஐந்து (05) வருட காலத்திற்குள் அந்த விருப்பத்தை பயன்படுத்துவதற்கு உட்பட்டு உத்தியோகத்தரொருவர் வேண்கோள் விடுக்குமிடத்து அவ்வாறு ஓய்வுபெறுவதற்கு அவருக்கு இடமளிக்கப்படும்.

*16.* **இடைக்கால ஏற்பாடுகள்.**-

இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைப்படுத்தப்படும் திகதியிலிருந்து 05 வருட காலம் பட்டப் பின்படிப்பு பட்டத் தேவைப்பாட்டை பூரணப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுவதோடு, அவ்வாறு பூர்த்திசெய்யும் உத்தியோகத்தர்கள் ஏற்புடைய ஏனைய தகைமைகளையும் பூரணப்படுத்தியிருப்பின் அவர்கள் அந்த ஏனைய தகைமைகளைப் பூரணப்படுத்தும் திகதி அல்லது இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு வெளியிடப்படும் திகதிக்கு பிந்தியதாக அமையும் திகதி ஆகிய இரு தினங்களிலும் பிந்திய திகதியிலிருந்து தரம் I இற்கு பதவி உயர்த்தப்படுவர்.

17. **வேறு :**

17.1 அனைத்து நியமனங்கள் தொடர்பிலும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் இல 1589/30 மற்றும் 2009.02.20 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள நடைமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் இயைபுடையதாகும்.

17.2 இந்த பிரமாணக் குறிப்பினால் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

17.3 இந்தப் பிரமாணக் குறிப்பின் சிங்களம், தமிழ், ஆங்கிளம் ஆகிய பிரதிகளில் வாசகங்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு நிகழுமிடத்து சிங்கள வாசகமே மேலோங்கி நிற்கும்.

**"அ" பின்னிணைப்பு**

**இலங்கை தொழில்நுட்ப கல்விச் சேவையின் விரிவுரையாளர் மற்றும் ஆலோசகர் பதவிகளுக்கு ஏற்புடைய பாடத் துறைகள் மற்றும் விரிவுரையாளர், ஆலோசகர் பதவிகளுக்கான ஊடக மொழிக்கு அமைய பதவிகளின் எண்ணிக்கை**

| பதவி | பாடத் துறை இலக்கம் | பாடத் துறை | பதவிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | சிங்கள மொழி | தமிழ் மொழி | ஆங்கில மொழி |
| விரிவுரையாளர் | 1. | தன்னியக்க தொழில்நுட்பம் (மோட்டார் வாகன தொழில்நுட்பம்) | - | - | 20 |
| | 2. | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | - | - | 54 |
| | 3. | பண்ணை இயந்திர உபகரண தொழில்நுட்பம் | - | - | 10 |
| | 4. | நிர்மாணிப்பு தொழில்நுட்பம் | - | - | 30 |
| | 5. | குளிரேற்றல் மற்றும் குளிரூட்டி தொழில்நுட்பம் | - | - | 10 |
| | 6. | உற்பத்தித் தொழில்நுட்பம் | - | - | 05 |
| | 7. | உணவு உற்பத்தி தொழில்நுட்பம் | - | - | 07 |
| | 8. | உயிரியல் மருத்துவப் பொறியியல் தொழில்நுட்பம் | - | - | 05 |
| | 9. | மெகாரொனிக் தொழில்நுட்பம் | - | - | 10 |
| | 10. | உருகிணைத்தல் தொழில்நுட்பம் | - | - | 05 |
| | 11. | தொலைதொடர்பு தொழில்நுட்பம் | - | - | 05 |
| | 12. | இலத்திரனியல் தொழில்நுட்பம் | - | - | 05 |
| | 13. | தங்கஆபரண தொழில்நுட்பம் | - | - | 05 |
| | 14. | வர்த்தகம் | 15 | 05 | 18 |
| | 15. | ஆங்கிலம் | - | - | 18 |
| | 16. | விஞ்ஞானம் மற்றும் கணிதம் | 24 | 05 | 18 |
| | | **மொத்தம்** | **39** | **10** | **225** |

| பதவி | பாடத் துறை இலக்கம் | பாடத் துறை | பதவிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | சிங்கள மொழி | தமிழ் மொழி | ஆங்கில மொழி |
| ஆலோசகர் | 17. | இலத்திரனியல் | 44 | 07 | - |
| | 18. | கட்டிடத் தொழில் | 93 | 19 | - |
| | 19. | மோட்டார் இயந்திரவியல் | 59 | 13 | - |
| | 20. | மர வேலை | 42 | 05 | - |
| | 21. | குளிரேற்றல் மற்றும் குளிரூட்டி | 26 | 07 | - |
| | 22. | தொழில்நுட்ப சித்திரம் | 55 | 11 | - |
| | 23. | மின்னியல் | 65 | 11 | - |
| | 24. | தகவல் தொழில்நுட்பம் | 72 | 13 | - |
| | 25. | விஞ்ஞானம் /கணிதம் | 57 | 10 | - |
| | 26. | வர்த்தகம் | 54 | 16 | - |
| | 27. | உலோக வேலை | 66 | 11 | - |
| | 28. | சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து | 16 | 07 | 21 |
| | 29. | தங்க ஆபரணம் | 4 | - | - |
| | 30. | விவசாயம் | 12 | - | - |
| | 31. | ஆங்கிலம் | - | - | 81 |
| | | **மொத்தம்** | **665** | **130** | **102** |

**“ஆ” பின்னிணைப்பு**

**இலங்கை தொழில்நுட்ப கல்விச் சேவையின் தரம் III க்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு தேவையான கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் பற்றிய விபரம்**

| பதவி | கல்வி/தொழிற் தகைமைகள் மற்றும் அனுபவம் | |
|---|---|---|
| | கல்வி/தொழிற் தகைமைகள் | அனுபவம் |
| விரிவுரையாளர் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் பல்கலைக்கழகமொன்றில் விண்ணப்பிக்கும் பாடத்துறைக்கு ஏற்புடைய பிரதான பாடத்தை உள்ளடக்கி பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் துறைக்கு ஏற்புடைய NVQ 7 மட்டத்திற்குச் சமமான SLQF 5 ஆம் மட்டத்தைப் பெற்றிருத்தல். | உரிய கல்வி / தொழிற் தகைமைகளைப் பெற்ற பின்னர் அரசாங்கத் திணைக்களமொன்றில் அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றில் அல்லது கம்பனிகள் சட்டத்தின் கீழ் அல்லது முதலீட்டுச் சபையில் பதிவுசெய்யப்பட்டுள்ள கல்வி / பயிற்சி நிறுவனமொன்றில் விண்ணப்பிக்கும் பாடத்துறையில் கற்பித்தல் தொடர்பான 03 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>அரசாங்கத் திணைக்களமொன்றில் அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றில் அல்லது கம்பனிகள் சட்டத்தின் கீழ் அல்லது முதலீட்டுச் சபையில் பதிவுசெய்யப்பட்டுள்ள தொழிற்சாலையொன்றில் விண்ணப்பிக்கும் பாடத்துறையுடன் தொடர்புடைய பதவியொன்றில் மூன்று 03 வருட தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>மேற்படி இரு முறையிலும் மூன்று (03) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல். |

| பதவி | கல்வி/தொழிற் தகைமைகள் மற்றும் அனுபவம் | |
|---|---|---|
| | கல்வி/தொழிற் தகைமைகள் | அனுபவம் |
| ஆலோசகர் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் பல்கலைக்கழகமொன்றில் விண்ணப்பிக்கும் பாடத்துறைக்கு ஏற்புடைய பிரதான பாடத்தை உள்ளடக்கி பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் துறைக்கு ஏற்புடைய NVQ 7 மட்டத்திற்குச் சமமான SLQF 5 ஆம் மட்டத்தைப் பெற்றிருத்தல். | உரிய கல்வி / தொழிற் தகைமைகளைப் பெற்ற பின்னர் அரசாங்கத் திணைக்களமொன்றில் அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றில் அல்லது கம்பனிகள் சட்டத்தின் கீழ் அல்லது முதலீட்டுச் சபையில் பதிவுசெய்யப்பட்டுள்ள கல்வி / பயிற்சி நிறுவனமொன்றில் விண்ணப்பிக்கும் பாடத்துறையில் கற்பித்தல் தொடர்பான 03 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.<br><br>அல்லது<br><br>அரசாங்கத் திணைக்களமொன்றில் அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றில் அல்லது கம்பனிகள் சட்டத்தின் கீழ் அல்லது முதலீட்டுச் சபையில் பதிவுசெய்யப்பட்டுள்ள தொழிற்சாலையொன்றில் விண்ணப்பிக்கும் பாடத்துறையுடன் தொடர்புடைய பதவியொன்றில் மூன்று 03 வருட தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.<br><br>அல்லது<br><br>மேற்படி இரு முறையிலும் மூன்று (03) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல். |

**“இ” பின்னிணைப்பு**

**இலங்கை தொழில்நுட்ப கல்விச் சேவையின் தரம் III ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு தேவையான கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் பற்றிய விபரங்கள்**

| பதவி | கல்வி /தொழிற் தகைமைகள் மற்றும் அனுபவம் | |
|---|---|---|
| | கல்வி /தொழிற் தகைமைகள் | அனுபவம் |
| விரிவுரையாளர் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் பல்கலைக்கழகமொன்றிலிருந்து விண்ணப்பிக்கும் பாடத்துறைக்கு ஏற்புடைய பிரதான பாடத்தை உள்ளடக்கி பட்டமொன்றைப் பெற்றிருத்தல். | தொழிற்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் MT-1-2016 சம்பள அளவுத்திட்டத்தைக் கொண்ட கைவினை காட்சிப்படுத்துநர், பண்ணை முகாமையாளர் பதவியொன்றில் அல்லது MT-2-2016 சம்பள அளவுத்திட்டத்தைக் கொண்ட ஆய்வுகூட உதவியாளர் பதவியொன்றில் விண்ணப்பிக்கும் பாடத்துறை தொடர்பில் உரிய கல்வி / தொழிற் தகைமைகளைப் பெற்ற பின்னர் 05 வருட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்டிருத்தல்.<br><br>அல்லது<br><br>தொழிற்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் MN-6-2016 சம்பள அளவுத் திட்டத்தைக் கொண்ட மதிப்பீட்டு உத்தியோகத்தர் பதவியொன்றில் விண்ணப்பிக்கும் பாடத்துறை தொடர்பில் உரிய கல்வி / தொழிற் தகைமைகளைப் பெற்ற பின்னர் 03 வருட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்டிருத்தல். |

| பதவி | கல்வி /தொழிற் தகைமைகள் மற்றும் அனுபவம் | |
|---|---|---|
| | கல்வி /தொழிற் தகைமைகள் | அனுபவம் |
| ஆலோசகர் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் பல்கலைக்கழகமொன்றிலிருந்து விண்ணப்பிக்கும் பாடத்துறைக்கு ஏற்புடைய பிரதான பாடத்தை உள்ளடக்கி பட்டமொன்றைப் பெற்றிருத்தல். | தொழிற்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் MT-1-2016 சம்பள அளவுத்திட்டத்தைக் கொண்ட கைவினை காட்சிப்படுத்துநர், பண்ணை முகாமையாளர் பதவியொன்றில் அல்லது MT-2-2016 சம்பள அளவுத்திட்டத்தைக் கொண்ட ஆய்வுகூட உதவியாளர் பதவியொன்றில் விண்ணப்பிக்கும் பாடத்துறை தொடர்பில் உரிய கல்வி /தொழிற் தகைமைகளைப் பெற்ற பின்னர் 05 வருட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்டிருத்தல்.<br>அல்லது<br>தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக் களத்தின் MN-6-2016 சம்பள அளவுத் திட்டத்தைக் கொண்ட மதிப்பீட்டு உத்தியோகத்தர் பதவியொன்றில் விண்ணப்பிக்கும் பாடத்துறை தொடர்பில் உரிய கல்வி /தொழிற் தகைமைகளைப் பெற்ற பின்னர் 03 வருட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்டிருத்தல். |
| | அல்லது | |
| | மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் நிறுவனமொன்றிலிருந்து விண்ணப்பிக்கும் பாடத்துறை தொடர்பில் தேசிய தொழிற் தகைமை மட்டம் 6 டிப்ளோமா சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல். | தொழிற்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் MT-1-2016 சம்பள அளவுத்திட்டத்தைக் கொண்ட கைவினை காட்சிப்படுத்துநர், பண்ணை முகாமையாளர் பதவியொன்றின் அல்லது MT-2-2016 சம்பள அளவுத்திட்டத்தைக் கொண்ட ஆய்வுகூட உதவியாளர் பதவியொன்றில் விண்ணப்பிக்கும் பாடத்துறை தொடர்பில் உரிய கல்வி /தொழிற் தகைமைகளைப் பெற்ற பின்னர் 07 வருட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்டிருத்தல். |
| | அல்லது | |
| | மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் நிறுவனமொன்றிலிருந்து விண்ணப்பிக்கும் பாடத்துறை தொடர்பில் தேசிய தொழிற் தகைமை மட்டம் 5 அல்லது அதற்குச் சமமான மட்டத்தில் டிப்ளோமா சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல். | தொழிற்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் MN-1-2016 சம்பள அளவுத்திட்டத்தைக் கொண்ட வளாக கட்டுப்பாட்டாளர், விவசாய நடத்துநர், வேலைத்தள உதவியாளர் பதவியில் விண்ணப்பிக்கும் பாடத்துறை தொடர்பில் உரிய கல்வி /தொழிற் தகைமையைப் பெற்ற பின்னர் 10 வருட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல்.<br>அல்லது<br>தொழிற்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் MT-1-2016 சம்பள அளவுத்திட்டத்தைக் கொண்ட கைவினை காட்சிப்படுத்துநர், பண்ணை முகாமையாளர் பதவியொன்றின் அல்லது MT-2-2016 சம்பள அளவுத்திட்டத்தைக் கொண்ட ஆய்வுகூட உதவியாளர் பதவியொன்றில் விண்ணப்பிக்கும் பாடத்துறை தொடர்பில் உரிய கல்வி /தொழிற் தகைமைகளைப் பெற்ற பின்னர் 09 வருட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்டிருத்தல்.<br>அல்லது<br>தொழிற்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் MN-7-2016 சம்பள அளவுத்திட்டத்தைக் கொண்ட கைவினை காட்சிப்படுத்துநர் (அதிஉயர் தரம்) பதவியை வகிக்கும் உத்தியோகத்தரொருவராக இருத்தல். |

### "ஈ" பின்னிணைப்பு

01. பரீட்சையின் பெயர். : இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் தரம் III இற்கு திறந்த /மட்டுப்படுத்தப்பட்ட பிரிவின் கீழ் ஆட்சேர்ப்பதற்கான எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை

02. பரீட்சைப் பற்றிய விபரம் : இந்தப் பரீட்சை 02 வினாப் பத்திரங்களைக் கொண்டது.

| பாடங்கள் | காலம் | உச்சப் புள்ளிகள் |
|---|---|---|
| 1. உளச்சார்பு | 01 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |
| 2. பொது அறிவு | 01 மணித்தியாலம் | 100 புள்ளிகள |

03. பரீட்சையை நடாத்தும் அதிகாரி: பரீட்சை ஆணையாளர் நாயகம்.

04. பரீட்சை எவ்வளவு காலத்திற்கு ஒரு தடைவ நடாத்தப்படும் என்பது பற்றி : தேவைக்கேற்ற வகையில்

05. பரீட்சைக்கான பாட விதானம்

| பாடங்கள் | பாடத்திட்டம் |
|---|---|
| 1. உளச்சார்பு | எண்முறை ஆற்றல், தர்க்க ரீதியில் கருத்துக்களை முன்வைத்தல் மற்றும் அறிவாற்றலை பரீட்சிப்பதன் மூலம் சேவையின் கடமைகள் தொடர்பில் விண்ணப்பதாரியின் தகைமை மற்றும் ஆற்றலைப் பரீட்சித்துப் பார்க்கும் நோக்கில் இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். இது பல்தேர்வு வினாக்கள் மற்றும் சிறு வினாக்களைக் கொண்டு அமைந்திருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டிய வினாப்பத்திரமொன்றாகும். |
| 2. பொது அறிவு | இலங்கையின் அரசியல், சமூக, கலாசார, பொருளாதார மற்றும் சுற்றாடல் உள்ளிட்ட பேண்தகு மற்றும் நியம தரங்கள், சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் மிக்க தற்கால நிகழ்வுகள் மற்றும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி பற்றி உத்தியோகத்தருக்கு உள்ள அறிவைப் பரீட்சிப்பதை நோக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்ட பல்தேர்வு மற்றும் சிறு வினாக்களைக் கொண்டு அமைந்திருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டிய வினாப்பத்திரமொன்றாகும். |

### "உ" பின்னிணைப்பு

01. பரீட்சையின் பெயர் : இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் தரம் III க்கு ஆட்சேர்ப்பதற்கான தொழிற்தேர்வு – (திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட)

02. பரீட்சைப் பற்றிய விபரம்:

| பரீட்சை | பாட எண் மற்றும் பாடத்துறை | | காலம் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| தொழிற் தேர்வு | 17. | இலத்திரனியல் | உச்ச மணித்தியாலங்கள் 06 | 100 |
| | 18. | கட்டிடத் தொழில்நுட்பம் | | |
| | 19. | மோட்டார் இயந்திரவியல் | | |
| | 20. | மரவேலை | | |
| | 21. | குளிரேற்றல் மற்றும் குளிரூட்டி | | |
| | 22. | தொழில்நுட்பச் சித்திரம் | | |
| | 23. | மின்னியல் | | |
| | 27. | உலோக வேலை | | |
| | 28. | சுருக்கெழுத்து மற்றும் தட்டச்சு | | |
| | 29. | தங்க ஆபரணம் | | |

03. பரீட்சையை நடாத்தும் அதிகாரி: அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் பரீட்சை சபையொன்றினால்.

04. பரீட்சை எவ்வளவு காலத்திற்கு ஒரு தடைவ நடாத்தப்படும் என்பது பற்றி : தேவைக்கேற்ற வகையில்

05. பரீட்சைக்கு ஏற்புடைய தொழிற் துறைகள் மற்றும் பாடத்திட்டம் :

| பாட எண் மற்றும் பாடத்துறை | | பாடத்திட்டம் |
|---|---|---|
| 17. | இலத்திரனியல் | இந்த தொழிற் தேர்வுகள் தொழில்நுட்பவியல்/தொழில்நுட்பக் கல்லூரிகளில் தற்போது நடைபெறும் தேசிய தொழிற் தகைமை மட்டம் 5 (NVQ-5) பாடநெறிகளின் செயல்முறைப் பரீட்சைகளுக்கு சமமான மட்டத்தில் நடைபெறும். |
| 18. | கட்டிடத் தொழில்நுட்பம் | |
| 19. | மோட்டார் இயந்திரவியல் | |
| 20. | மரவேலை | |
| 21. | குளிரேற்றல் மற்றும் குளிரூட்டி | இதன் போது அபேட்சகர் தனது தொழில்நுட்ப அறிவு ஏற்புடைய இயந்திர உபகரணங்களை இயக்குவதற்கும் கருவிகளை இனம்காண்பதற்கும் கையாளுவதற்கும் அந்த உபகரணங்கள் மற்றும் கருவிகளைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு தனது கைவினைத்திறனை வெளிக்காட்டி புரிந்துணர்வை வழங்குவதற்கு உள்ள ஆற்றல் பரீட்சிக்கப்படும். |
| 22. | தொழில்நுட்பச் சித்திரம் | |
| 23. | மின்னியல் | |
| 27. | உலோக வேலை | |
| 28. | சுருக்கெழுத்து மற்றும் தட்டச்சு | |
| 29. | தங்கஆபரணம் | |

**"ஊ" பின்னிணைப்பு**

01. பரீட்சையின் பெயர் : இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படும் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை

02. பரீட்சைப் பற்றிய விபரம் : இந்தப் பரீட்சை 03 வினாப் பத்திரங்களைக் கொண்டது.

| | வினாப் பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1. | தாபன விதிக்கோவை, அரசாங்க சேவை ஆணைக் குழுவின் நடைமுறை விதிகள் மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| 2. | தொழில்நுட்பக் கல்வி மற்றும் கல்வி முறைமை | 03 மணித்தியாலங்கள | 100 | 40% |
| 3. | ஆங்கில மொழி | 03 மணித்தியாலங்கள | 100 | 40% |

03. பரீட்சையை நடாத்தும் அதிகாரி : பரீட்சை ஆணையாளர் நாயகம் அல்லது அமைச்சின் செயலாளரினால் அனுமதிக்கப் படும் நிறுவனமொன்றின் மூலம்.

04. பரீட்சை எவ்வளவு காலத்திற்கு ஒரு தடைவ நடாத்தப்படும் என்பது பற்றி : வருடத்திற்கு இரண்டு தடவைகள் நடாத்தப்படும்.

05. பரீட்சைக்கான பாடத்திட்டம் :

| | வினாப் பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம். |
|---|---|---|
| 1. | தாபன விதிக்கோவை, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் மற்றும் நிதி ஒழுங்கு விதிகள் | I. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் தொகுதி I<br>II. தாபன விதிக்கோவையின் VII, IX, XI, XII, XIII, XIV, XV, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII<br>III. நிதி ஒழுங்கு விதிகள் I ஆம் தொகுதி (X அத்தியாயம் தவிர) |

| | வினாப் பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம். |
|---|---|---|
| 2. | தொழில்நுட்பக் கல்வி மற்றும் கல்வி முறைமை | I. தொழில்நுட்பக் கல்வியின் குறிக்கோள்கள், பாடவிதான அபிவிருத்தி, சமூக தலைமைத்துவம், சீவியகாலக் கல்வி, மேற்பார்வை, கற்கைச் சூழல், மாணவர் முகாமைத்துவம் (Student Management) பரீட்சை முகாமைத்துவம், நூலக நிர்வாகம், மானிட மற்றும் பௌதீக வள முகாமைத்துவம்.<br><br>II. தர முகாமைத்துவக் கட்டமைப்பு<br><br>III. தேசிய தொழிற் தகைமைக் கட்டமைப்பு<br><br>IV. அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடனான தொடர்பு (Public - Private - Partnerships)<br><br>V. தொழில் வழிகாட்டல் செயற்பாடுகள், மாணவர்களை நிறுவனமயப்படுத்தல், வேறு நிறுவனங்களுக்கு தகவல்களை வழங்குதல், தொழிற்சாலைகள் / சேவை நிலையங்களுடன் தொடர்புகளைப் பேணுதல், பாடநெறித் தகவல்களை வழங்குதல், அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் (பாடசாலை மாணவர்கள், பெற்றோர், தொழிற் பயிற்சி பெறுவோர், அரசாங்க உத்தியோகத்தர்கள், பிரஜைகள்) கைத்தொழில் ஒருங்கிணைப்பு.<br><br>VI. தொழில்நுட்பக் கல்வி மதிப்பீட்டுச் செயன்முறை<br><br>VII. தொழிற் கல்வி மற்றும் பயிற்சியளிக்கும் செயன்முறையை பரீட்சித்தல். |
| 3. | ஆங்கில மொழி | க.பொ.த. (சா.த.) ஆங்கில மொழிக்கான பாடத்திட்டத்தை ஒத்த விடயதானங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட வினாப்பத்திர மொன்றாகும். |

*** குறிப்பு**

க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி பெற்றிருப்பின் ஆங்கில மொழியில் சித்தியடைய வேண்டிய தேவைப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படும்.

**"ஏ" பின்னிணைப்பு**

01. பரீட்சையின் பெயர் : இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படும் இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை

02. பரீட்சைப் பற்றிய விபரம் : இந்தப் பரீட்சை 02 வினாப்பத்திரங்களைக் கொண்டது.

| | வினாப் பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1. | செயல்முறை நிறுவன அறிவு | 03 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| 2. | தொழில்நுட்பக் கல்விச் சட்டம், தொழில்நுட்பக் கல்வி நிர்வாகம் மற்றும் மேற்பார்வை (தொழில்நுட்பக் கல்விச் சட்டத்திற்கு அவ்வப்போது செய்யப்படும் திருத்தங்கள் உள்ளடக்கப்படும்.) | 03 மணித்தியாலங்கள் | 100 | 40% |

03. பரீட்சையை நடாத்தும் அதிகாரி : பரீட்சை ஆணையாளர் நாயகம் அல்லது அமைச்சின் செயலாளரினால் அனுமதிக்கப் படும் நிறுவனமொன்றின் மூலம்.

04. பரீட்சை எவ்வளவு காலத்திற்கு ஒரு தடைவ நடாத்தப்படும் என்பது பற்றி : வருடத்திற்கு இரண்டு தடவைகள் நடாத்தப்படும்.

05. பரீட்சைக்கான பாடத்திட்டம் :

| *வினாப் பத்திரத்தின் பெயர்* | *பாடத்திட்டம்.* |
|---|---|
| செயல்முறை நிறுவன அறிவு | செயலாற்றுகை மதிப்பீடு, சம்பள ஏற்றங்கள் வழங்குதல், பிரயாணச் செலவு, பல்வேறுபட்ட லீவுகளை அனுமதித்தல், புகையிரத ஆணைச்சீட்டுக்கள் கோருதல், அரசாங்க விடுதிகளை ஒதுக்குதல், கடன் விண்ணப்பித்தல், கோவைகள் பரிமாற்றம், தொழிற்சங்க அங்கத்தவர்களின் உரிமைகள், அரசாங்க உத்தியோகத்தர்களின் அரசியல் உரிமைகள் பற்றி நடவடிக்கை எடுக்கும் போது உத்தியோகத்தர்களினால் நடைமுறை ரீதியில் செயற்பட வேண்டிய முறைப் பற்றி பரீட்சித்தல் தொடர்பில் தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரமொன்றாகும். |
| தொழில்நுட்பக் கல்விச் சட்டம், தொழில்நுட்பக் கல்வி நிர்வாகம் மற்றும் மேற்பார்வை (தொழில்நுட்பக் கல்விச் சட்டத்திற்கு அவ்வப்போது செய்யப்படும் திருத்தங்கள் உள்ளடக்கப்படும்.) | 1. **தொழில்நுட்பக் கல்விச் சட்டம்**<br>I. 2006 ஆம் ஆண்டு தொழில்நுட்பவியல் கல்லூரிகளை நிறுவும் ஏற்பாடுகள்.<br>II. 2008 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகச் சட்டம்<br>III. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் ஏற்படுத்தப்பட்ட தேசிய தொழிற் தகைமை (NVQ) மதிப்பீட்டுச் செயன்முறை<br>IV. தொழில்நுட்பவியல் / தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடாத்தப்படும் பாடநெறிகளின் பாடத்திட்டங்களை அங்கீகரிக்கும் செயன்முறை.<br>V. பாடவிதான அபிவிருத்திச் செயன்முறை<br>2. **தொழில்நுட்பக் கல்வி நிர்வாகம்**<br>I. தொழில்நுட்பவியல் /தொழில்நுட்பக் கல்லூரி நிர்வாகம். அமுலாக்கல் திட்டம் (Action Plan) மூலோபாய முகாமைத்துவத் திட்டம் (Strategic Management Plan), மானிட / பௌதீக வளங்கள் முகாமைத்துவம், பாடநெறி முகாமைத்துவம்.<br>II. தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சியளிக்கும் திணைக்களம் மற்றும் ஏற்புடைய நிரல் அமைச்சு.<br>a. திணைக்களத்தினதும் அமைச்சினதும் கொள்கைகள்<br>b. தொழில்நுட்பவியல் / தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் அச்செயற்பாடுகள் உள்ளிட்ட அமைச்சின் மற்றும் அதன் கீழுள்ள தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்களின் ஒழுங்குபடுத்தல்.<br>c. தேசிய மற்றும் பிராந்திய மட்டத்தில் கல்விசார் திட்டமிடலின் நோக்கங்கள் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்தல். |

| *வினாப் பத்திரத்தின் பெயர்* | *பாடத்திட்டம்.* |
|---|---|
| | III. திணைக்களம் மற்றும் தொழில்நுட்பவியல் / தொழில்நுட்பக் கல்லூரி முகாமைத்துவம், பாடசாலை, கைத்தொழில், சமூகத் தொடர்புகளை ஒருங்கிணைத்தல்.<br><br>IV. தொழில்நுட்பக் கல்வி முகாமைத்துவத் தகவல்களை சேகரித்தல்.<br><br>V. தொழில்நுட்பக் கல்விக்கு ஏற்புடைய விசேட கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்<br><br>3. **தொழில்நுட்பக் கல்வி மேற்பார்வை**<br><br>I. தொழில்நுட்பவியல் / தொழில்நுட்பக் கல்லூரி மேற்பார்வைக்கான வேலைத்திட்டம் மற்றும் செயற்பாடுகளின் தொடர்ச்சியான மதிப்பீட்டுக்குப் பயன்படுத்தப்படும் தேர்வுமுறைகள்<br><br>II. தொடர்ச்சியான மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம்<br><br>– தொழில்நுட்பவியல் / தொழில்நுட்பக் கல்லூரிகள் சுய மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம்.<br><br>– திணைக்களத்தினால் தொழில்நுட்பவியல் / தொழில் நுட்பக் கல்லூரி மேற்பார்வை மற்றும் தொழில்நுட்பவியல் கல்லூரிகள் மூலம் தொழில்நுட்பக் கல்லூரிகளை மேற்பார்வை செய்தல்.<br><br>III. உள்ளக மதிப்பீடுகளை வெளிக்குழுக்களினால் ஏற்றுக்கொள்ளல்.<br><br>IV. திணைக்களம் உரித்தாகும் அமைச்சு மற்றும் திணைக்களத்தினால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள், பிரமாணக் குறிப்புக்கள் மற்றும் ஏனைய வெளியீடுகள் தொடர்பில் போதியளவு அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றது. |

**“ஐ” பின்னிணைப்பு**

**இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் தரம் II உத்தியோகத்தர்களினால் பூரணப்படுத்த வேண்டிய பட்டப் பின்படிப்பு தகைமை**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் பல்கலைக்கழமொன்றிலிருந்து / உயர் கல்வி நிறுவனமொன்றிலிருந்து அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றினால் பின்வரும் பாடங்களில் ஏதேனுமொரு பாடத்திற்கு உரித்தான தனது பாடத் துறைக்கு ஏற்புடைய பாடத்தை உள்ளடக்கிய பட்டப் பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். அந்த பட்டப் பின்படிப்பு பட்டத்திற்கு ஆகக் குறைந்தது ஒரு வருட கல்வியாண்டுக்கான கல்வி நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். இங்கு குறிப்பிடப்படும் துறைகளுக்கு ஏற்புடைய

சில பட்டப் பின்படிப்பு பட்டங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்களினால் நடாத்தப்படாத போது அவ்வாறான சந்தர்ப்பங்களில் அந்தத் துறைக்கு ஏற்புடைய பட்டப் பின்படிப்பு டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருப்பது போதுமானதாகும்.

| பாட என் மற்றும் பாடத்துறை | பெற்றுக்கொள்ள வேண்டிய பட்டப் பின்படிப்புப் பட்டம் |
|---|---|
| 01. தன்னியக்க தொழில்நுட்பம் (மோட்டார் வாகன தொழில்நுட்பம்)<br>04. நிர்மாணிப்பு தொழில்நுட்பம்<br>05. குளிரேற்றல் மற்றும் குளிரூட்டி தொழில்நுட்பம்<br>06. உற்பத்தித் தொழில்நுட்பம்<br>09. மெகாரொனிக் தொழில்நுட்பம்<br>10. உருகிணைத்தல் தொழில்நுட்பம்<br>12. மின்னியல் தொழில்நுட்பம்<br>17. இலத்திரனியல்<br>18. கட்டிடத் தொழில்<br>19. மோட்டார் இயந்திரவியல்<br>21. குளிரூட்டி மற்றும் குளிரூட்டல்<br>23. மின்னியல்<br>27. உலோக வேலை | – இயந்திரப் பொறியியல் / சிவில் பொறியியல் / தன்னியக்க / மின்னியல் / உற்பத்தி / மெகாரொனிக் தொழில்நுட்பம் |
| 02. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்<br>11. தொலைதொடர்பு தொழில்நுட்பம்<br>24. தகவல் தொழில்நுட்பம் | – கணினி விஞ்ஞானம் / முகாமைத்துவ தகவல் தொகுதி / தொடர்பாடல் தொழில்நுட்பம் / கணினி வன்பொருள் / தகவல் முகாமைத்துவம் / தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் / கல்வி தகவல் தொழில்நுட்பம் |
| 03. பண்ணை இயந்திர உபகரண தொழில்நுட்பம் | – பண்ணை இயந்திர உபகரணங்கள் / அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பம் |
| 07. உணவுத் தொழில்நுட்பம்<br>30. கமத்தொழில் | – கால்நடை வளர்ப்பு / சூழலியல் / விவசாயப் பொருளியல் / உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் |
| 08. உயிரியல் மருத்துவ பொறியியல் தொழில்நுட்பம் | – உயிரியல் மருத்துவ தொழில்நுட்பம் |
| 13. தங்க ஆபரண தொழில்நுட்பம்<br>29. தங்க ஆபரணம் | – நுண்கலைகள் (Fine Arts) |
| 14. வர்த்தகம்<br>26. வர்த்தகம்<br>28. சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து | – நிதியியல் / கணக்கியல் / வியாபார முகாமைத்துவம் / அரச நிர்வாகம் / நிதி முகாமைத்துவம் / வர்த்தகம் / சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் |
| 15. ஆங்கிலம்<br>31. ஆங்கிலம் | – மொழியியல் (Linguistic) |
| 16. விஞ்ஞானம் மற்றும் கணிதம்<br>25. விஞ்ஞானம் / கணிதம் | – புள்ளிவிபரவியல் / அளவுரீதியான நுட்பமுறைகள் மற்றும் அளவுரீதியான பகுப்பாய்வு / புள்ளிவிபரக் கற்கை |
| 20. மரவேலை<br>22. தொழில்நுட்பச் சித்திரம் | – தொழில்நுட்ப அல்லது தொழில்நுட்பக் கல்வி / கல்வி முறைமைகள் |
| தரம் II பிரதிப் பணிப்பாளர் அல்லது உப அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் பட்டப் பின்படிப்பு பட்டத்தை பூர்த்திசெய்யும் போது | – மனிதவள முகாமைத்துவம் / வியாபார முகாமைத்துவம் / அரச முகாமைத்துவம் / நிதி முகாமைத்துவ தொடர்பாடல் / கல்வி முகாமைத்துவம் / சமூகவியல் / சமூக வேலை / சமூக அபிவிருத்தி / கல்வி / அபிவிருத்திக் கல்வி / அபிவிருத்திப் பொருளியல் |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பட்டப் பின்படிப்பு பட்டம் அல்லாத தகைமையொன்றுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விசேட அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

07-548

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.